

# அமரர் வள்ளிப்பிள்ளை மாணிக்கம் அவர்களின்

# முதலாம் ஆண்டு நினைவுமலர்

நிகழ்வு நாள் : 17.03.2015

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ் இந்து வேளாண் தனிநாயகம் முதலியார் வழித் தோன்றலும்
நெடுந்தீவு மேற்கைப் பிறப்பிடமாகவும் இராமநாதபுரம்
கிளிநொச்சியை வசிப்பிடமாகவும் கொண்ட

அமரர்

# வள்ளிப்பிள்ளை மாணிக்கம்

## அவர்களின்
## சிவபதப்பேறு குறித்த

**1ம் ஆண்டு நினைவுமலர்**

**நிகழ்வு நாள்: 17.03.2015**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்கள் பாதமலர் திருவடிக்கு

# சமர்ப்பணம்

குடும்பத்தின் குலவிளக்காய்
தலைவியாய் தாயாய்
தன்னலம் துறந்து இல்லற நலனுக்காய்
தன்னையே அர்ப்பணித்த தாயே
இப்பூமியிலே எங்கே காண்போம்
இனி
உம்மை
மாவடி அம்மன் பாதம்
தேடிச்சென்றீரோ
தாயே உங்கள் பாதக்கமலங்களுக்கு
இம்மலரை அர்ப்பணம் செய்கின்றோம்
ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம்சாந்தி!

குடும்பத்தினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓராண்டு நினைவாக..!



மண்ணில்
18.08.1940

விண்ணில்
28.03.2014

## அமரர் வள்ளிப்பிள்ளை மாணிக்கம்

அவர்களின்

**திதிவெண்பா**

ஆண்டு விஜய வருடம் பங்குனித் திங்கள்
28ம் நாள் அமர துவாதசி திதியதனில்
வேண்டும் உயர்குணம் வள்ளிப்பிள்ளை மாணிக்கம்
யாண்டும் பரமன் பதம் அடைந்திட்ட நாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்





## விநாயகர் துதி

ஐந்து கரத்தனை ஆனைமுகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக்கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே.

## தேவாரம்

தாயினும் நல்ல தலைவனென்றடியார்
தம்மடி போற்றிசைப் பார்கள்
வாயினும் மனத்தும் மருவிநின் றகலா
மாண்பினர் காண்பல வேடர்
நோயிலும் பிணியுந் தொழிலர்பா னீக்கி
நுழைதரு நூலினர் ஞாலம்
கோயிலும் சுனையும் கடலுடன் சூழ்ந்த
கோணமா மலையமர்ந் தாரே.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம்

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்த ஆரமுதே
பொய்ம்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கி
புழுத்தலைப் புலையனேன் தனக்குச்
செம்மையே ஆய சிவபதம் அளித்த
செல்வமே சிவபெருமானே
இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.

## திருவிசைப்பா

**ஒளிவளர் விளக்கே உலப்பிலா வொன்றே**
**உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே**
**தெளிவளர் பளிங்கின் திரள்மணிக்குன்றே**
**சித்தத்துள் தித்திக்கும் தேனே**
**ஒளிவளர் உள்ளத் தானந்தக் கனியே**
**அம்பலம் ஆடரங்காக**
**வெளிவளர் தெய்வக் கூத்து கந் தாயைத்**
**தொண்டனேன் விளம்புமா விளம்பே**

## திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டி
அழுதிடப் பாற்கடல் ஈந்த பிரான்
மாலுக்குச் சக்கரம் அன்று அருள்
செய்தவன் மன்னிய தில்லை தன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற தில்லைச்
சிற்றம்பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயில வல்லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புராணம்

இறவாத இன்ப அன்பு வேண்டிப்
பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல்
உன்னையென்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும்
நான் மகிழ்ந்து பாடி
அறவாநீ ஆடும்போது உன்னடியின்
கீழ் இருக்க என்றார்.

## திருப்புகழ்

இறவாமற் பிறவாமல் எனையாள் சற்குருவாகிப்
பிறவாகித் திறமான பெருவாழ்வைத் தருவாயே
குறமாதைப் புணர்வோனே குகனே சற்குமரேசா
கறையானைக் கிளையோனே கதிர்காமப் பெருமாளே.

## வாழ்த்து

வான்முகில் வளாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறையரசுசெய்க குறைவிலாதுயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 28.03.2014 அன்று அமரத்துவம் எய்திய

# அமரர்.வள்ளிப்பிள்ளை மாணிக்கம்

## அவர்களின் வாழ்க்கைச் சுவட்டில் இருந்து...



நாற் புறமும் கடலாலே சூழப்பட்ட
இந்து மா சமுத்திரத்தின் நித்திலமாம்
இயற்கை அன்னை படைத்துக் கொண்ட
செழிப்புறும் பெற்ற அற்புதத் திருநாடாம்
இலங்கைத் தீவாம் தார்ப்பரிய பூமியதாம்

வீரமும் காதலும் வேரொடு பூண்ட
அழகுறும் பெற்ற யாழ் நகராம்
யாழ் நகரின் ஒரு பாதி தீவகமாம்
தீவுகளில் உயர்ந்ததனால் நெடுந்தீவாம்
சஞ்சீவி மலைகொண்டு – சிரஞ்சீவி
கால் பதித்த ஊரதுவாம்
விஸ்வரூப ஒளி கொண்ட திருநாடாம்
ஒற்றுமையில் ஒன்றுபட்ட ஓர் இனமாம்
விருந்தோம்பி மனம் நிறையும் மக்களுமாய்
மேலோங்கி சிறப்புறு நெடுந்தீவு மேற்கினிலாம்
உயர் வேளாண் குலத்தினிலே தோன்றினளாம்
வைத்திலிங்கம் சின்னம்மாவிற்கு – ஒரு
கடைக்குட்டி மகளாய் உதித்தனளாம்
வள்ளிப்பிள்ளை எனும் நாமம் தனிலாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குன்றாத இளமையுடன் குதூகலமாய் வாழ்ந்தனளாம்
பசுபதிப்பிள்ளை, தனுஷ்கோடி, கணபதிப்பிள்ளை,
தில்லையம்பலம், கோவிந்து, தியாகராசா – எனும்
ஆருயிர் சகோதரர்களுக்கு அழகுறு
உறவொன்றாய் அன்போடு வாழ்ந்தனளாம்
காமாட்சிப்பிள்ளை, கற்பகம், பூரணம்
செல்லம்மா, இராசம்மா என்னும்
அக்காமார்க்கு அளவுகோல் இல்லாத
ஆருயிர்த் தங்கையாம்
இவ்வாறு நற்குடும்பம் உயரப் பெற்று
குன்றிடாமல் வாழ்ந்தனளாம்
வளமது பல ஓங்கும்
வட்டக்கச்சி வந்தனளாம்
இசை கலையோடு பலகலையும்
கற்றுக் கொண்டனளாம்
பெற்றோர்க்கும் உற்றார்க்கும்
சகோதரத்திற்கும் உறவுகட்கும்
உயர்ந்த ஒரு ஒளி நிலவாய் வாழ்ந்தனளாம்
பக்திப் பாற்கடலில்
பரிணமித்து நின்றனளாம்
ஆலய தரிசனமும்
அவர் பணியில் ஒன்றெனலாம்
காளையர் பலர் கண்கவர காத்திருந்த வேளையிலே
சின்னத்தம்பி குஞ்சாச்சிப்பிள்ளையின்
தவப்புதல்வனாம் மாணிக்கம் என்பவரை
மனதார நேசித்தனளாம்
பல இடருறு மத்தியிலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முருகன்டிப் பிள்ளையாரின்
முன்றலின் முன்னே நின்று
இருகரம் தொடுத்தனளாம்
புது நகராம் புதுக்காட்டில்
புது மணத்தம்பதியாய்
புகழ்பாடி வாழ்ந்தனளாம்
கனகம்மா, மீனாட்சி, முருகேசு,
கோவிந்து, சிவகாமி, தங்கமுத்து,
யோகவதி, லட்சுமி என
மைத்துனர்களோடு மைத்துனிமாரையும்
அன்போடு அணைத்து
உரிமை பல பூண்டனளாம்
செல்வத்தில் உயர் செல்வம்
பிள்ளைச்செல்வம் ஆறு பெற்று
பெருமிதம் அடைந்தனளாம்
நித்தியலட்சுமி, யோகராசா, கனகேஸ்வரி,
சுதானந்தராஜா, கிருஷ்ணராஜா, சிவநிதி என
பல்வேறு நாமம் இட்டு
பார்போற்ற வளர்த்தனளாம்
கல்வி அதை ஊட்டினளாம்
மேன்மை மிகு வாழ்விற்காய்
வெளிநாடு அனுப்பி வைத்தனளாம்
இடர் பல பட்டும் – பல
இன்னல் தான் தாங்கி
தனி மரமாய் நின்று
பிள்ளைகளை உயர்த்தினளாம்
திருமணப்பருவம் எய்திடும் வேளையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேதநாயகம், நாதகிருஷ்ணன், ஜெயச்சந்திரன் –
ஆகியோரை
மருமகன்களாய் மனதார ஏற்று
கரம் பிடித்துக் கொடுத்தனளாம்
தேவரஞ்சினி, தவசோதி இருவரையும் – தன்
மருமகள்களாய் இன்பமாய் ஏற்று
இருமகள்களாய் பெருமைப்பட்டனளாம்
மரியா, கரோலின், கர்சன்,
மதுர்சன், அனோசன், சஜிதா,
கோபிகா, கோபிஷன், தனுஷன்,
கீர்த்திகா, கீர்த்திகன், தமிழ்மதி,
நிதர்சன் என்று பேரப்பிள்ளைகளை
தன் பேரர்கள் என்று
மார்தட்டிக் கொண்டனளாம்
ஜெய்டன், ஜெசுவா என்னும்
பூட்டப்பிள்ளைகள் தான் பெற்று
பூரித்து நின்றனளாம்
தனக்கென வாழாது
தளராது உழைத்தனளாம்
உற்றார்க்கும் உறவினர்க்கும்
புதுக்காட்டில் உள்ள அனைவருக்கும்
உற்ற ஒரு தோழியாய்
உறுதுணையாய் நின்றனளாம்
பிறர் துன்பப்படும் போதெல்லாம்
துயர் துடைத்துக் கொண்டனளாம்
கஸ்டப்படும் போதெல்லாம்
கரம் கொடுத்து நின்றனளாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நன்றாக நாம் எல்லாம் இருக்கும் நேரம்
நோய் வந்து பிடித்துக் கொண்டதுவாம்
மாறாத நோய் வந்த போதும் – தன்
மனத்திடத்தால் எழுந்து நடந்தனளாம்
திடீரென வந்த மரணச்செய்தி
தீராத இழப்பைக் கொடுத்தனவாம்
ஆண்டு ஒன்று ஆனாலும்
முடியவில்லை முடியவில்லை அம்மா
எம் கண்களால் வடிவதை
கை கொண்டு துடைக்க முடியவில்லை அம்மா

*உங்கள் ஆத்மா சாந்திக்காய்*


*இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்!!!*

ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும்
மாண்டார் வருவரோ இம் மானிலத்தே





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீருடன் கணவன்

அன்பெனும் அகராதியில்
ஆத்ம திருப்தியை அள்ளித்தந்தவள்
அல்லும் பகலும்
எனக்காதரவூட்டி
அருகமர்ந்து கொள்பவள்
கண்ணற்ற நிலையிலும்
எனை களங்கமற்று பார்த்தவள்
அவள் கரங்களின் திசையில்
அல்லவா நான்வாழ்ந்து கொண்டவன்

தன் நகைச்சுவையால்
அகச்சுவையும் அள்ளித்தந்தவள்
தவறு கண்டால் தட்டிக்கேட்ட
தைரியசாலி அவள்
காதலித்து மணம் முடித்து
என்னை தினம்
கரம் பிடித்துக் கொண்டவள்

இல்லறத்தை நல்லறமாய்
எனக்கள்ளித் தந்தவள்
உயிராய் அவளை
நான் நேசித்தேன்
உயிரிலும் மேலாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னை சுவாசித்தாள்
பக்குவமாய் பிள்ளைகளைப்
பெற்றெடுத்தாள்
பார் போற்ற பலகலையும்
அள்ளிக் கொடுத்தாள்
பக்கதுணை எதுவுமின்றி
வளர்த்துக் கொண்டாள்
நேர் வழியில் பிள்ளைகளை
இட்டுச்சென்றாள்
நேர்மைக்கு இன்றவர்கள்
இலக்கணம் ஆனார்

எதிர்வரும் இடரெல்லாம்
தனதாக்கிக் கொண்டாள்
இன்பங்கள் மட்டும்
எமக்கள்ளித் தந்தாள்
தனிமரமாய் நின்று அவள்
துன்பப் பட்ட போதும்
தனக்கென்று வாழாமல்
வாழ்ந்து கொண்டாள்
நோயென்று தான்
அவள் இருந்த போதும் -
எமக்காய்
நூறு முறை துடித்துக்
கொண்டே இருந்தாள்
பொய்யாக பேசுவதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரும்பாதவள் போலியாக
நடிக்கவும் தெரியாதவள்
நேர் படவே யாவற்றையும்
பேசிக் கொள்வாள்- அதனால்
இடர்பல பட்டும்
அவள் இன்னலுற்றாள்

தனிமையில் என்னை
விட்டுப் போக விரும்பாததால்
வெளிநாடு போகவும்
மறுத்துக் கொண்டாள்
தன் வலியிலும்
மேலாய் என் மனவலிக்கு
ஆறுதல் தந்திடும்
என் மனைவியவள்

ஒரு கணம் என்னை
விட்டு பிரிந்து விட்டாள் என்னும்போது
உள்ளம் குமுறி வலிக்கிறது
அம்மா.

ஆருயிர்க் கணவன்
மாணிக்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாலாட்டிய தாயை இழந்த தவிப்போடு

அம்மா அம்மா என்றுஅழைக்குதம்மா என் இதயம்
அரவணைத்து எனக்கு ஆசைமுத்தம் தாராயோ
உங்களின் பொன்னான வார்த்தை எல்லாம்
என் நாவில் தேனாய் இனிக்குதம்மா

நீங்கள் இன்றி இங்கே நான்
நீர் இழந்த மரம் போலே வாடி நிற்கின்றேன்
ஓடோடி வந்தென்னை ஒருமுறை பாராயோ

கள்ளம் கபடமிலா உங்கள் மனம் – எனை
கதி கலங்க வைத்து விட்டதம்மா
பத்து மாதம் எனைச் சுமந்துபாலூட்டி சீராட்டி
பாரினிலே எனைபார்த்திட்ட என் தாயே

ஏன் அம்மா என்னை
ஏங்க விட்டு எட்டாத் தூரம் சென்றாய்
ஏங்கி ஏங்கித் தவிக்கின்றேன்உங்கள் குரல் கேட்க
ஓடோடி வந்து என்னைஒரு கணம் அணைத்திடம்மா

ஆண்டொன்று ஆனாலும் அம்மாஆற முடியவில்லை அம்மா
எத்தனை ஆண்டுகளானாலும் ஆறாது என் இதயம்
அழுதழுதே புரண்டாலும் அம்மா அம்மா
ஆறாது ஆறாது என் இதயம் அம்மா

– மகள் : நித்தியலட்சுமி –



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீ இங்கு இல்லை என்னும் போது வலிக்குதம்மா?

தலைமகனாய் எனைப் பெற்றவளே
தன்னம்பிக்கை ஊட்டிய என் தாயே
முகமலர்வாய் என்றென்றும்
எனக்குள்ளே முதற் கடவுள் நீயே அம்மா
தந்தைக்கு நிகராக நின்றாய்தளராத
பாசமதை தந்தாய் – நீ
போற்றி வளர்த்த ஒவ்வொரு நாளும்பெரும்
பொக்கிஷமாய் தெரிகிறது அம்மா
உன்னுடைய பாசத்திலே
கொஞ்சக்காலம் வாழ்ந்தேன் அம்மா
உன்னுடைய கதைகள்
கேட்டுகொஞ்சக் காலம் சிரித்தேனம்மா

என்னுடைய கண்ணீர
உன் அன்பில் காய்ந்தது அம்மா
என்னுடைய பாரம்
உன் தோள்கள் தாங்கியதம்மா
என்னுடைய காயம் கூட
நீ தொட்டால் ஆறியதம்மா
உன்னோடு உறங்கும் போதே
உலகை மறந்தேனம்மா
மருத்துவம் கை விட்ட போதும்
மண்டியிட்டே நின்றேனம்மா
காத்திடலாம் உனை என்று
கடவுளை வேண்டினேனம்மா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீ இங்கு இல்லை என்னும்
போது வலிக்குதம்மா
நீ உயிர்த்திடுவாயோ எனமறு
முறை நினைக்க தோன்றுதம்மா
உன்னை ஒரு தரம் பார்த்திடுவோமென
ஓடோடி வந்தேனம்மா
முழித்திடுவாயா? விழித்திடுவாயா?
என பல முறை பார்த்தேனம்மா
பதைத்தே நின்றேனம்மா –
பாராமுகமாய் படுத்தே இருந்தாயம்மா
என்ன நான் தான் செய்து விட்டேன் – உனக்காய்
யோசித்தால் போதவில்லை அம்மா

இனி உன்னைப் பார்ப்பதெங்கே?
தாங்க முடியவில்லை அம்மா
வரி கொண்டு உன் அன்பை
வடிக்க வார்த்தைகளே இல்லை அம்மா!
அம்மா! அம்மா!

– மகன் : யோகராசா–



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளத்தில் நன்றே நிறைந்திருந்தாய் அம்மா..!

பெருந்தவத்தால் எனைப்
பெற்று பெருவுளத்தால் எனைப் பேணி
கருத்தோடு கண்ணிமை
போல் காத்து வந்தாய் என் தாயே
அம்மாவை இழந்துவிட்டேன்
இனிப் பார்க்க முடியாது
அம்மா எனக்கில்லை
என் துயர் சொல்லி அழ
அனல் பட்ட புழு போல
நெஞ்சம் தான் எனக்குண்டு
பள்ளி செல்லும் வேளையிலே
அள்ளி எடுத்து முத்தமிட்டாய் - அம்மா

உள்ளத்தில் நன்றே
நிறைந்திருந்தாய் அம்மா
உண்மையாய் என்னை
நிலைக்க வைத்தாய்
நல்லொழுக்கம்
தன்னை ஊட்டுவித்தாய்
நன்றாய் வாழ வழிவகுத்தாய்
உயற்சி பெறவே முயற்சிப்பாய்
அயற்சி தனை நீக்குவித்தாய்
முன்னேற்றப் பாதைக்குகொண்டு
சென்றாய் அம்மா

**மகள்**
**கனகேஸ்வரி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## மடி மீது வைத்து தாலாட்டினீர் அம்மா..!

உருவாக்கினீர் என்னை கருவாக்கினீர்
உயிரூட்டினீர் உலகம் தனைக் காட்டினீர்
மடி மீது வைத்து தாலாட்டினீர்
மாண்புடனே என்னை சீராட்டினீர்
அமுதூட்டியே என்னை ஆளாக்கினீர்
அன்பூட்டியே என்னை அழகாக்கினீர்
நேர்மைப் பாதைக்கு வழிகாட்டினீர்
நேர்த்தியுடன் வாழ உரமூட்டினீர்
தன்மானம் உள்ளவனாய் எனையாக்கினீர்
தளராது நான் செல்ல வழி கோலினீர்

– மகன் கிருஷ்ணராஜா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தூங்கும் கட்டிலே தேடுகிறேன் – வருவாயா அம்மா

கண்களில் வழிகின்ற நீரது மாறுமா
கலத்தில் பூட்டிய உருவம் தான் மாறுமா

உடலது வாழ்வது சிலகாலம் தானம்மா
உள்ளத்தில் வாழ்வாய் பலகாலம் தானம்மா
உதிரத்தில் கலந்தாய் அம்மாஉள்ளத்தில் நிறைந்தாய் அம்மா

அருகிருந்து உன்னைப் பார்த்தேனம்மா
அதிரத்தான் என்னை வைத்தாயம்மா
அநாதையாய் நான் ஆனேனம்மா அல்லும் பகலும் அழுகிறேனம்மா

பூசைக்காய் உன்னைப் பூசிப்பேனம்மா
பூமகளாய் என் இதயத்தில் இருப்பாயம்மா
பூட்டிய வீட்டைத் திறந்தேனம்மா புரண்டு புரண்டு அழுதேனம்மா

தூங்கும் கட்டிலில் தேடுகிறேன் – அம்மாவை
தூங்கி எழவில்லையம்மா எழமுடியாமல்
தூங்கியே விட்டீர்கள் அம்மாதுடியாய்த் துடிக்கிறேன் அம்மா

ஆண்டொன்று ஆனாலும் அம்மா
ஆறாது என் இதயம் ஆறாது என் இதயம்

– மகள் சிவநிதி –



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன நெகிழ்வுடன் மருமக்கள்...

காலத்தை வென்ற காவியமாய் கல கல என்ற
சிரிப்புடனே
எம்மை எல்லாம் களிப்புறச் செய்த எங்கள் மாமியே

காலனவன் உங்களை அழைத்திடவே
எமை எல்லாம் கவலையில் ஆழ்த்திவிட்டு
எட்டாத தூரம் சென்றீர்கள் எங்கள் மாமியே

உங்களை நேசிக்கும் நாங்கள்
உங்கள் பிரிவால் நிலை தளர்ந்து நிற்கின்றோம்-
இருந்தும்
உங்கள் ஆசிகளும் அறிவுரைகளும்
என்றென்றும் எமை வழி நடத்திச் செல்லும்

கண்கள் நிறைந்த நீரோடு கனவு சுமந்த நெஞ்சோடு
உங்கள் வரவை எண்ணி விழி
வாசலைத் தேடி நிற்கிறது மாமி
- **மருமகன்கள்-**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊரறிந்த உயர் குணம் தான் எங்கள் மாமி

அன்பின் முதல் உரு மாமி
அர்ப்பணிப்பின் மறுவடிவம் மாமி
சொற்றொடர் தனில்
கூறவார்த்தை
இல்லா வடிவுறு மாமி

அம்பாள் அருள் வேண்டி
அன்றாடம் கோயில் சென்று
குங்குமத் திலகமிட்டுகுது
கலமாய் வாழ்ந்த மாமி
பாச மழை பொழிந்து
பகலிரவாய் பாடுபட்டு
உறவிற்கு உரம் சேர்த்த
ஊரறிந்த உயர்
குணம் தான் எங்கள் மாமி
உத்தம குணம் கொண்டு
ஊருக்கெல்லாம் சேவை செய்து
சிந்திக்க வைத்துவிட்டு
சிறகடித்துப் பறந்ததென்ன





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரவணைத்த
அந்தக் கைகள் எங்கே?
அள்ளித் தந்த
அமிர்த சுவையும் எங்கே?
தட்டிக் கொடுக்கும்
உங்கள் தைரிய குணமும் எங்கே?
பெற்ற பிள்ளையைப்
போல் எமைப் பேணிக் காத்ததெங்கே

ஒற்றை சொல் கூட
எம்மை ஓங்கி அழைக்கவில்லையே
கொட்டிக் கொடுத்தாலும்
கிடைக்காத பெரும்பேற்றை
நாம் அடைந்தோம்
உம் பிறப்பால் - இன்று
ஆர்ப்பரித்த எங்கள்
அலைகடலேஅமைதி கொண்டதேனோ?

ஆண்டவன் உங்களை
அழைத்திட்ட பின்னாலே
அழுகிறது எம் இதயம்
வெறுமையிலே வெறுமையிலே

- மருமகள்கள் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேதலித்து நிற்கும் பேரர்கள்...

அன்பு மொழி பேசி
அரவணைத்து மகிழ்ந்தாய்
எத்தனை நாட்கள் உனைக் காணவில்லை
இனிய மொழி அதைக் கேட்கவில்லை
இதயம் வெதும்பி அழுகின்றோம்
இனிதாய் ஒரு முத்தம் தந்திடுவாய் அம்மம்மா
பேர்த்திகள் பேரன்கள்
என்றுஅருகிருந்து
வளர்த்தாய் அம்மம்மா
தொட்டில் இட்டு தாலாட்டிதூங்க
வைத்த தாயும் நீயம்மா
எமை விட்டுவிட்டுஏன்
பிரிந்தாய் அம்மம்மா
ஏங்கித் தவிக்கின்றோம்
நாங்கள் அம்மம்மா
ஆண்டு பல ஆனாலும்
கூடமீண்டும் வந்திடாது இந்த உறவு
அம்மம்மா இல்லாமல்
தானேஅழுகிறது எங்கள் மனது

- பேரன் பேர்த்திகள்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கே சென்றீர்கள்? எமை விட்டு விட்டு அப்பம்மா

பாசத்தைப் பாலாக்கி நேசத்தை நீராக்கி
அன்பாலே சீராட்டி நெஞ்சார பாராட்டினாய் அப்பம்மா
அன்புக்கு இலக்கணமாம் ஆசைக்கு உறைவிடமாம்
பண்பிற்கு பணிவிடமாம் பாசத்தின் ஒளிவிளக்காம் அப்பம்மா

படித்து நீங்கள் பட்டம் பெற்று பார் போற்றும் பேரன்களாய்
வாழ வேண்டும் என்று வாழ்த்திய அப்பம்மா
தூங்கி நாங்கள் இருந்திடாமல் துணிந்து நின்று செயற்படவே
துள்ளும் அலையை நாம் வெல்ல துணையாய் இருந்த
அப்பம்மா

அப்பம்மா என்றாலே ஓம் என்று ஒலிக்கிறதே!
எங்கே சென்றீர்கள்? எமை விட்டு விட்டு
தவிக்கின்றோம் நாங்கள் உங்கள் குரல் கேட்கவே அப்பம்மா
ஆண்டொன்று ஆனாலும் அப்பம்மா

அரவணைத்த கரங்கள் எமை ஆழப்பதிந்தனவே

– பேரன்கள் –



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூரிப்பிழந்த பூட்டன்கள்...

அன்பான பூட்டியம்மா ஆசை முத்தம் தந்த
பூட்டியம்மா
இனிய கதைகள் சொல்லியே இனிப்புத் தந்த
பூட்டியம்மா
சிந்தையிலே அன்புருகி சிரித்துப் பேசிய
பூட்டியம்மா
அன்னைத் தமிழில் அழகாக அரவணைத்த
பூட்டியம்மா
மடியில் வைத்துத் தாலாட்டி மகிழ வைத்த
பூட்டியம்மா – உங்களை
கண்ணாலே காண்பதற்கு காத்திருக்கும் ஏழைகள்
நாங்கள்

**- பூட்டன்கள் -**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உடன்பிறப்புகளின்
# உள்ளத்திலிருந்து...

அன்பு எழிலுறு அழகுத் தங்கையே
கள்ளம் கபடம் அற்றகடைக் குட்டி நிலவே

உயிரோடும் உணர்வோடும்உள்ளத்தில் கலந்தாயே
ஒரே பரிவாரங்களாய் ஒன்றித்து வாழ்ந்தோமே
ஒரே தட்டில் உண்டவளே ஒன்றாக உறங்கியவளே
புத்தகத்தைப் பறித்துபுதுக் கதைகள் சொன்னவளே
முட்டி மோதினோம் உருண்டு பிரண்டோம்
சண்டித் தனம் செய்தோம் ஒரு நொடியில் மறந்தோம்
ஒன்றித்துக் கொண்டோம்

மறுபடியும் எம் தங்கையாய் உருவெடுத்துக் கொள்வாயோ
காலமெல்லாம் - நாம் கதகதப்பில் வாழ்வதற்கு

**- சகோதர, சகோதரிகள் -**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனம் திறக்கும் மைத்துனர்கள்...

அன்புக்கு அரசி அவள்ஆளுமையின் நிமிர்வு அவள்
அமுதூட்ட சிறந்தவள் எமக்குஆதரவும் நல்கிடுவாள்

நேசம் நிறைந்தவளாய்நித்தம் ஒரு கதை சொல்லி
மாண்பு மிகுந்தவளாய்மச்சான் மச்சாள் என்பாள்
தாழாத துயரங்களில் மகிழ்விக்க சொல் தந்தாள்
தத்தளித்த போதெல்லாம்தாங்கக் கரம் கொடுத்தாள்

அழகாய் பல கதை சொல்லிஅதனில்
ஒரு நகைச்சுவை வைத்து
குறும்பாக சிரிக்கும் அந்த சிரிப்புகுன்றிடாமல்
நிற்கிறது எமக்குள்
ஊன்றியே எமை உருப்பார்த்த விழிகளிரண்டும்
மூடின திறப்பதேயில்லை என்ற முடிவுடனோ

உனை பூசித்த எமை எல்லாம் அழவைத்து விட்டு
யாசித்துக் கொண்டு கண் மூடி விட்டாயோ
ஆண்டொன்று ஆனாலும்மைத்துனியே உன்
அன்பு முகம் என்றும்மனதில் நிற்கிறதே

– மச்சான்மார், மச்சாள்மார் –



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## *கௌரி காப்பு*

*விநாயகர் துதி*

*முன்னின்று செய்யுள் முறையாய்ப் புனைவதற்கு*
*என்னின் றருள் செய் எலிவாகனப் பிள்ளாய்*
*சொற்குற்ற மொடு பொருட்குற்றம் சோர்வு தரும்*
*எக்குற்றமும் வாராமற்கா.*

வேண்டுதற் கூறு

காப்பெடுக்க வந்தேனே கௌரியம்மா தாயாரே
காத்தென்னைத் தேற்றிடுவாய் காளிமகா தேவியரே
காலமெல்லாம் நின்னரிய காப்பெடுத்தே வாழ்ந்திடுவேன்
எண்ணும் கருமம் இனிதாக முடித்திடுவாய்
பண்ணும் வினை யாவும் பனி போலப் போக்கிடுவாய்
உண்ணும் உணவாக உயிரினுக் குயிராக
என்றும் இருந்தே எனைக்காத்து வந்திடுவாய்
காடும் கடந்து வந்தேன் மலையும் கடந்து வந்தேன்
காளிமகா தேவியரே காப்பெனக்கு தந்திடுவாய்
சூலம் கொண்டவளே சுந்தர முகத்தவளே
அரியை உடையவளே அம்மாகாளி தாயே
கொடிய மகிஷாசூரனைக் கூறு போட்டவளே
அசுரக் குணம் யாவும் அழிக்கும் சுடர்க்கொடியே
சிவனை நினைத்தல்லோ சீர்விரதம் நீ இருந்தாய்
பரனை நினைத்தல்லோ பதி விரதம் நீ இருந்தாய்
அரனை நினைத்தல்லோ அன்று நீ நோன்பிருந்தாய்
சங்கரனை எண்ணியல்லோ சங்கரி நீ நோன்பிருந்தாய்
ஐங்கரனைப் பெற்றவளே அன்று நீ நோன்பிருந்தாய்
விரதத்தைக் கண்டே விழித்தான் சிவனவனும்
அம்மா உமையணைத்தே அருள்மாரி பொழிந்தானே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வகையாற்றுப் படலமிதை வழிவழியாய்க் காட்டிடுவீர்
நெறியறியாத் திகைப்போர்க்கு நெறிமுறையைக்
காட்டிடுவாய்
காப்பைப் புனைந்து விடு காலபயம் ஓட்டிவிடு
நூலைப் புனைந்து விடு நுண்ணறிவை ஊட்டி விடு
வல்லமையைத் தந்து விடு வையகத்தில் வாழ விடு
காளிமகா தேவியரே காப்பருளும் தேவியரே
காப்பை புனைபவளே காப்பாய் இருப்பவளே
நாடு செழிக்கவென்றே நற்காப்பு அருளுமம்மா
வீடு செழிக்கவென்றே விழைகாப்பு அருளுமம்மா
நல்வாழ்வு வாழ்வதற்கு நறுங்காப்பு அருளுமம்மா
அல்லல் அறுப்பதற்கு அருட்காப்பு அருளுமம்மா
பிள்ளை அற்றவர்க்கு பெருங்காப்பு அருளுமம்மா
பூமணியே மாமணியே புனிதவதி தாயவளே
நான் விரும்பும் காப்பை நலமுடனே தாருமம்மா
கல்வி சிறப்பதற்கும் கலைமகளே வாருமம்மா
செல்வம் சிறப்பதற்கு திருமகளே வாருமம்மா
வீரம் சிறப்பதற்கு வீரசக்தி தாருமம்மா
பாட்டுடைத் தலைவியரே பராசக்தி தாயவளே
ஏட்டுடைத் தேவியரே எல்லாம் மிகு வல்லபையே
காப்பெடுக்க வந்தேனம்மா கனிவுடனே பாருமம்மா
பால் பழங்கள் வெற்றிலைகள் பல்வகைத்திரவியங்கள்
நானுமக்குத் தாறேனம்மா நயந்தென்மைக் காருமம்மா
காளிமகா தேவியளே காசினிக்கு வித்தவளே
வித்தை விதைப்பவளே வினைகாக்கும் காப்பவளே
எத்தால் வாழ்ந்திடுவோம் எல்லாம் உமதருளே
காசினியில் வேற்றுமையை கணப்பொழுதில் மாற்றிவிட்டால்
ஏசலின்றி வாழ்ந்திடுவோம் ஏத்து புகழ் தேவியரே
காப்பெனக்குப் போட்டுவிட்டால் கல்மனது இளகிவிடும்
ஞானம் பெருகிவிடும் நல்வாழ்வு மிகுந்து வரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்ந்து அணிவோருக்கு தொட்டதெல்லாம் ஜெயமாகும்
இசைந்து அணிவோர்க்கு நினைத்ததெல்லாம் ஈடேறும்
நம்பி அணிவோருக்கு நல்லதெல்லாம் பெருகிவரும்
நாள்கள் கோள்கள் எல்லாம் நலமுடனே இணைந்துவரும்
சந்தனச் சார்ந்தவளே சங்கரியே சாந்தினியே
குங்குமப் பூச்சவளே குலக்கொழுந்தே கௌரியம்மா
காப்புக் கட்டிவிட்டு கடமை முடிந்ததென்று
ஏப்பம் மிக விட்டு என்றுமே இருந்தறியேன்
நாளும் பொழுதிலெல்லாம் நறுங்காப்பு கட்டதனில்
பூவும் நீருமிட்டு போற்றி வணங்கிடுவேன்
காலைப் பொழுதெழுந்து காப்பதனில் விழித்திடுவேன்
ஞானச் செழுஞ் சுடரே காளியுனைக் காணுகின்றேன்
காப்பெனக்குக் கையிலுண்டு கடமைகளைச் செய்திடுவேன்
ஏய்ப்பவரைக் கண்டால் எரிமலை போல் கனன்றிடுவேன்
தீமைச் செயலெதுவும் தெரியாது செய்கையிலே
காப்புக் கையிலிருந்து கண்திறந்து காட்டுமடி
சொல்லற் கரிதான சோதிமிகு காப்பதனை
இருபது நாள்வரையில் இசைவோடு விரதமிருந்து
பக்தி மனதுடனே பரவி யணிவோர்க்கு
சித்தியெல் லாந்தருவாள் சீர்பெருகு கௌரியவள்
முத்திக்கு வழியுமுண்டு முக்கால உணர்வுமுண்டு
எச்சகத்திலுள் ளோர்களெல்லாம் ஏற்றியெமைப் போற்றிடுவர்
சொற்சக்தி பொருட்சக்தி துலங்கி வந்திடவே
அச்சக்தி எல்லாம் அருள்வாள் கௌரியவள்
கௌரிக் காப்பதனை காலம் தவறாமல்
முறையாய் அணிந்து வர முன்வினைகள் நீங்கிவர
ஞானம் ஓங்கிவர நல்லறிவு துலங்கிவர
தேவிமகா காளியரே தெவிட்டாத தீங்கனியே
காளியாய் வந்தமர்ந்த கௌரியே காப்பருளும்

*திருச்சிற்றம்பலம்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காப்பு
## நேரிசை வெண்பா

## குறள் வெண்பா

அமரரிடர் தீர அமரம் புரிந்த
குமரனடி நெஞ்சே குறி நூல்

### நிலைமாண்டிய ஆசிரியப்பா

சஷ்டியை நோக்கச் சரவண பவனார்
சிஷ்டருக் குதவும் செங்கதிர் வேலோன்
பாதமிரண்டில் பன்மணிச் சதங்கை
கீதம் பாட கிண்கிணி ஆட
மையல் நடஞ்செய்யும் மயில்வா கனனார்
கையில்வே லால்எனைக் காக்க என்று வந்து
வரவர வேலா யுதனார வருக
வருக வருக மயிலோன் வருக
இந்திரன் முதலா எண்திசை போற்ற
மந்திர வடிவேல் வருக வருக
வாசவன் மருகா வருக வருக
நேசக் குறமகள் நினைவோன் வருக
ஆறுமுகம் படைத்த ஐயா வருக
நீறிடும் வேலவன் நித்தம் வருக
சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக
சரவண பவனார் சடுதியில் வருக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரவண பவச ரரரர ரரர
ரிஹண பவச ரிரிரிரி ரிரிரி
நிபவ சரஹண நிறநிற நிறென

வசர ஹணப வருக வருக
அசுரர் குடிகெடுத்த ஐயா வருக
என்னை ஆளும் இளையோன் கையில்
பன்னிரெண்டு ஆயதம் பாசங் குசமும்
பரந்த விழிகள் பன்னிரண்டு டிலங்க

விரைந்து எனைக் காக்க வேலோன் வருக
ஐயும் கிலியும் அடைவுடன் செளவும்
உய்யொளி செளவும் உயிரையுங் கிலியும்
கிலியுஞ் செளவும் கிளரொலி யையும்
நிலைபெறறென்முன் நித்தமும் ஒளிரும்

சண்முகன் நீயும் தனிஒளி ஒவ்வும்
குண்டலி யாம்சிவ குகன்தினம் வருக
ஆறுமுகமும் அணிமுடி ஆறும்
நீறுஇடு நெற்றியும் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச் செவ்வாயும்
நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்
ஈர்ராறு செவியில் இலகு குண்டலமும்
ஆறிரு திண்புயத்து அழகிய மாஉபில்
பல் பூ ஷணமும் பதக்கமும் தரித்சு
நன்மணி பூண்ட நவரத்தின மாலையும்
முப்புரி நூலும் முத்தணி மார்பும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செப்பு அழகுடைய திருவயிறு உந்தியும்
துவண்ட மருங்கில் சுடர் ஒளிப் பட்டும்
நவரத்னம் பதித்த நற்சீராவும்
இருதொடை அழகும் இணைமுழந் தாளும்

திருவடி அதனில் சிலம்பொலி முழங்க
செககண செககண செககண செகண
மொகமொக மொகமொக மொகமொக மொகென
நகநக நகநக நகநக நகென
டிகுகுண டிகுடிகு டிகுகுண டிகுண

ரரரர ரரரர ரரரர ரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி
டுடுடு டுடுடு டுடுடு டுடு
டிகுடிகு டிகுடிகு டங்கு டிங்கு
விந்து விந்து மயிலோன் விந்து

முந்து முந்து முருகவேள் முந்து
என்றனை ஆளும் ஏரகச் செல்வ
மைந்தன் வேண்டும் வர மகிழ்ந்து உதவும்
லாலா லாலா லாலா வேசமும்
லீலா லீலா லீலாவிநோத னென்

உன் திருவடியை உறுதி என்று எண்ணும்
எண்றெலை வைத்துன் இணையடிகாக்க
என் உயிடீக்கு உயிராம் இறைவன் காக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பன்னிரு விழியால் பாலனைக் காக்க
அடியேன் வதனம் அழகுவேல் காக்க
பொடிபுனை நெற்றியை புனிதவேல் காக்க
கதிர் வேல் இரண்டும் கண்ணினைக் காக்க
விழிசெவி இரண்டும் வேலவர் காக்க
நாசிகள் இரண்டும் நல்வேல் காக்க
பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க
முப்பத் திருபல் முனைவேல் காக்க
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க
கன்னம் இரண்டும் கதிர்வேல் காக்க
என்இளம் கழுத்தை இனியவேல் காக்க
மார்பை இரத்தின வடிவேல் காக்க
சேர் இள முலைமார் திருவேல் காக்க
வடிவேல் இருதோள் வளம்பெறக் காக்க
பிடரிகளிரெண்டும் பெருவேல் காக்க
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க
பழுபதினாறும் பருவேல் காக்க
வெற்றிவேல் வயிற்றை விளங்கவேல் காக்க
சிற்றிடை அழகுறச் செவ்வேல் காக்க
நாணாம் கயிற்றை நல்வேல் காக்க
ஆண் குறிகளை அயில்வேல் காக்க
பிட்டம் இரண்டும் பெருவேல் காக்க
வட்டக் குதத்தை வல்வேல் காக்க
பணைத்தொடை இரண்டும் பருவேல் காக்க
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க
ஐவிரல் அடியினை அருள்வேல் காக்க
கைகள் இரண்டும் கருணைவேல் காக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்கை இரண்டும் முரண்வேல் காக்க
பின்கை இரண்டும் பின்னவள் ளிருக்க
நாவில் சரஸ்வதி நற்றுணை ஆக
நாபிக் கமலம் நல்வேல் காக்க
முப்பா நாடியை முனைவேல் காக்கா

எப்பொழு தும் எனை எதிர்வேல் காக்க
அடியேன் வசனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க
வரும்பகல் தன்னில் வச்சிரவேல் காக்க
அரையிருள் தன்னில் அனையவேல் காக்க

ஏமத்தில் சாமத்தில் எதிர்வேல் காக்க
தாமதம் நீங்கிச் சதுர்வேல் காக்க
காக்க காக்க கனகவேல் காக்க
நோக்க நோக்க நொடியினில் நோக்க
தாக்கத் தாக்கத் தடையறத் தாக்க

பார்க்க பார்க்க பாவம் பொடியட
பில்லி சூனியம் பெரும்பகை அகல
வல்லபூதம் வாலாஷ் டிகப்பேய்கள்
அல்லல் படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைகள் தின்னும் புழக்கடை முனியம்

கொள்ளிவாய்ப் பேய்களும் குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரம ஷதரும்
அடியனைக் கண்டால் அலறிக் கலங்கிட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரிசி காட்டேரி இத்துன்ப சேனையும்
எல்லிலும் இருட்டிலும் எதிர்ப்படும் அண்ணரும்
கனபூசை கொள்ளும் காளியோடு அனைவரும்
விட்டாங்காரரும் மிகுபல பேய்களும்
தண்டியக் காரரும் சண்டா ளர்களும்
என்பெயர் சொல்லவும் இடிவிழுந்து ஓடிட
ஆனை அடியினில் அரும்பா வைகளும்
பூனை மயிரும் பிள்ளைகள் ளென்பும்
நாகமும் மயிரும் நீள்முடி மண்டையும்
பாவைக ளுடனே பலகல சத்துடன்
மனையில் புதைத்த வஞ்சனை தனையும்
ஓட்டியப் பாவையும் ஒட்டியச் பாவையும்

காசும் பணமும் காவுடன் சோறும்
ஓதுமஞ் சனமும் ஒருவழிப் போக்கும்
அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட
மாற்றார் வஞ்சகர் வந்து வணங்கிடக்
காலதூ தாணெனைக் கண்டாறகலங்கிட

அஞ்சி நடுங்கிட அரண்டு புரண்டிட
வாய்விட்டு அலறி மதிகெட்டு ஓடப்
படியினில் முட்டப் பாசக் கயிற்றால்
கண்டுடனாங்கம் கதறிடக் கட்டு
கட்டியுருட்டு கால்கை முறியக்
கட்டு கட்டு கதறிடக் கட்டு
முட்டு முட்டு முழிகள் பிதுங்கிட
செக்கு செக்கு செதில் செதலாக
சொக்கு சொக்கு சூர்ப்பகைச் சொக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குத்து குத்து கூர்வடி வேலால்

பற்று பற்று பகலவன் தணலெரி
தணலெரி தணல்எரி தணலது வாக
விடு விடு வேலை வெருண்டு அதுஓடப்
புலியும் நரியும் புன்னரி நாயும்
எலியும் கரடியும் இனித்தொடர்ந்து ஓடத்
தேளும் பாம்பும் செய்யான் பூரான்
கடிவிட விஷங்கள் கடித்துயர் அங்கம்
ஏறிய விஷயங்கள் எளிதுடனிறங்க
ஒளிப்பும சுளுக்கும் ஒருதலை நோயும்
வாதம் சயித்தியம் வலிப்பும் பித்தம்

சூலைசயங் குன்மம் சொக்குச் சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடல்விப் பிரதி
பக்கப்பிளவை படர்தொடை வாழை
கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி
பற்குத் தரணை பருவரை யாப்பும்
எல்லாப் பிணியும் எந்தனைக் கண்டால்
நில்லாது ஓட நீ எனக் கருள்வாய்
ஈரேழு உலகமும் எனக்க உறவாக
ஆணும் பெண்ணும் அனைவரும் எனக்கா
மண்ணாள் அரசரும் மகிழ்ந்து உறவாக
உன்னைத் துதிக்க உன்திரு நாமம்
சரவண பவனே சையொளி பவனே
திரிபுர பவனே திகழொளி பவனே
பரிபுர பவனே பவமொழி பவனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரிதிரு மருகா அமரா பதியைக்
காத்துத் தேவர்கள் கடுஞ்சிறை விடுத்தாய்
கந்தா குகனே கதிர் வேலவனே
காத்திகை மைந்தா கடம்பா கடம்பனை
இடும்பனை அழித்த இனியவேல் முருகா
தணிகா சலனே சங்கரன் புதல்வா
கதிர்கா மத்துஉறை கதிர்வேல் முருகா
பழனிப் பதிவாழ் பால குமாரா
ஆவினன் குடிவாழ் அழகிய வேலா
செந்தின் மாமலை உறும் செங்கல்வ ராயா
சமராபுரி வாழ் சண்முகத் தரசே
காரர் குழலாள் கலைமகள் நன்றாய்
என்னா விருக்க யானுனைப் பாட
எனைத் தொடர்ந் திருக்கும் எந்தை முருகனைப்
பாடினேன் ஆடினேன் பரவச மாக
ஆடினே னாடினேன் ஆவினன் குடியை
நேச முடன்யான் நெற்றியி லணியப்
பாச வினைகள் பற்றது நீங்கி
உன்பதம் பெறவே உன்னருளாக
அன்புட னிரட்ஷி அன்னமும் சொன்னமும்
மெத்தமெத் தாக வேலா யுதனார்
சித்திபெற் றடியேன் சிறப்புடன் வாழ்க
வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குற மகளுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க வாழ்க வாரணத் துவசம்
வாழ்க வாழ்கவென வறுமைகள் நீங்க
எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை அடியேன் எத்தனை செயினும்
பெற்றவ னீகுரு பொறுப்ப துன்கடன்
பெற்றவள் குறமகள் பெற்றவ ளாமே
பிள்ளையென்றன்பாய்ப் பிரிய மளித்து
மைந்தனென் மீதுன் மனமகிழ்ந்து தருளித்
தஞ்சமென் றடியார் தழைத்திட வருள் செய்
கந்தர் சஷ்டி கவசம் விரும்பிய

பாலன் தேவ ராயன் பகர்ந்ததைக்
காலையில் மாலையில் கருத்துட ன்நாளும்
ஆசார த்துடன் அங்கம் துலக்கி
நேச முடனொரு நினைவது வாகிக்
கந்தர் சஷ்டிக் கவச மிதனைச்
சிந்தை கலங்காது தியானிப் பவர்கள்
ஒருநாள் முப்பத் தாறுருக்கொண்டு
ஓதியே செவித்து உகந்துநீ றணிண
அஷ்டதிக் குள்ளோர் அடங்கலும் வசமாய்த்
திசைமன்ன ரெண்மர் சேர்ந்தங் தருளுவரை
மாற்றல ரெல்லாம் வந்து வணங்குவர்
நாவகோள் மகிழ்ந்து நன்மை யளித்திடும்
நவமத னெனவும் நல்லெழில் பெறுவர்
எந்த நாளுமீ ரெட்டாய் வாழ்வர்
கந்தர்கை வேலாங் கவசத் தடியை
வழியாயக் காண மெய்யாய் விளங்கும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விழியாற் காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லாதவரை பொடிப்பொடி யாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சர்வ சத்துரு சங்கா ரத்தடி
அறிந்தென துள்ளம் அஷ்டலட் - சுமிகளில்
வீரலட் சுமிக்கு விருந்துண வாக
சூரபத் மாவை துணித்தகை யதனால்
இருபத்தேழிவர்க் குவந்தமு தளித்த
குருபரன் பழநிக் குன்றினி லிருக்கும்

சின்னக் குழந்தை சேவடி போற்றி
எனைத்தடுத் தாட்கொள என்றன துள்ளம்
மேவிய வடிவுறும் வேலவ போற்றி
தேவர்கள் சேனா பதியே போற்றி
குறமகள் மனமகிழ் கோவே போற்றி
திறமிகு திவ்விய தேகா போற்றி
இடும்பா யுதனே இடும்பா போற்றி
கடம்பா போற்றி கந்தா போற்றி
வெட்சி புனையும் வேளே போற்றி
உயர்கிரி கனக சபைக்கோர் ரரசே
மயில்நடமிடுவோய் மலரடி சரணம்
சரணஞ் சரணஞ் சரவண பவ ஓம்
சரணஞ் சரணஞ் சண்முகா சரணம்
சரணஞ் சரணஞ் சண்முகா சரணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சகலகலா வல்லிமாலை

திருச்சிற்றம்பலம்

வெண்டா மரைக்கன்றி நின்பதந் தாங்கவென் வெள்ளை யுள்ளத்
தண்டா மரைக்குத் தகாது கொலோசக மேழுமளித்
துண்டானுறங்க வொழித்தான் பித்தாகவுண்டாக்கும் வண்ணம்
கண்டான் சுவை கொள் கரும்பேசகல கலா வல்லியே

நாடும் பொருட் சுவை சொற்சுவை தோய்தர நாற்கவியும்
பாடும் பணியில் பணித்தருள் வாய் பங்க யாசனத்திற்
கூடும் பசும் பொற் கொடியே கனதனக் குன்றுமைம் பாற்
காடும் சுமக்குங் கரும்பே சகல கலா வல்லியே

அளிக்கும் செழுந்தமிழ் தெள்ளமு தார்ந்துன் னருட் கடலிற்
குளிக்கும் படிக்கென்று கூடுங்கொ லோவுளங் கொண்டு தெள்ளித்
தெளிக்கும் பனுவற் புலவோர் கவிமழை சிந்தக் கண்டு
களிக்குங் கலாப மயிலே சகல கலா வல்லியே

தூக்கும் பனுவற் றுறை தோய்த்த கல்வியுஞ் சொற் சுவை தோய்
வாக்கும் பெருகப்பணித் தருள் வாய் வட நூற் கடலும்
தேக்குஞ் செழுந்தமிழ்ச் செல்வமுந் தொண்டர் செந் நாவினின்று
காக்குங் கருணைக் கடலே சகல கலா வல்லியே

பஞ்சப் பிதந்தரு செய்ய பொற் பாதபங் கேரு கமென்
நெஞ்சத் தடத்தல ராத தென் னேநெடுந் தாட் கமலத்
தஞ்சத் துவச முயர்ந்தோன் செந் நாவு மகமும் வெள்ளைக்
கஞ்சத் தவிசொத் திருந்தாய் சகல கலா வல்லியே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்ணும் பரதமும் கல்வியுந் தீஞ்சொற் பனுவலும் யான்
எண்ணும் பொழுதெளி தெய்தநல் காயெழு தாமறையும்
விண்ணும் புவியும் புனலுங் கனலும் வெங்காலுமன்பர்
கண்ணுங் கருத்தும் நிறைந்தாய் சகல கலா வல்லியே

பாட்டும் பொருளும் பொருளாற் பொருந்தும் பயனுமென்பாற்
கூட்டும் படிநின் கடைக்கனல் காயுளங் கொண்டு தொண்டர்
தீட்டுங் கலைத்தமிழ் தீம்பா லமுதந் தெளிக்கும் வண்ணங்
காட்டும் வெள்ளோதிமப் பேடே சகல கலா வல்லியே.

சொல்விற் பனமு மவதான முங்கல்வி சொல்லவல்ல
நல்வித்தை யுந்தந் தடிமை கொள் வாய் நளினாசனஞ் சேர்
செல்விக்கரி தென் றொரு கால முஞ்சிதை யாமை நல்குங்
கல்விப் பெருஞ் செல்வப் பேறே சகல கலா வல்லியே.

சொற்கும் பொருட்கு முயிரா மெய்ஞ் ஞானத்தின் தோற்றமென்ன
நிற்கின்ற நின்னை நினைப்பவர் யார் நிலத் தோய் புழைக்கை
நற்குஞ் சரத்தின் பிடியோ டரசன்ன நாண நடை
கற்கும் பதாம்புயத் தாளே சகல கலா வல்லியே.

மண்கண்ட வெண்குடைக் கீழாக மேற்பட்ட மன்னரு மென்
பண்கண் டளவிற் பணியச் செய் வாய்படைப் போன் முதலாம்
விண்கண்ட தெய்வம்பல் கோடியுண் டேனும் விளம்பிலுன் போற்
கண்கண்ட தெய்வமுளதோ சகல கலா வல்லியே

திருச்சிற்றம்பலம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பு

அன்பு ஆண்டவன் அருளில் ஆரம்பமாகிறது.
அன்பு அழகிய வாழ்க்கையின் அடித்தளம்
அன்பு இணைந்து கொண்டு அணைத்துச்செல்லும்
அன்பு அதிகமாகும் போது மனிதனாகின்றோம்
அன்பு சகலத்தையும் தாங்கும் சகலத்தையும் சகிக்கும்
அன்பு இருக்கும் இடத்தில் அமைதியை காணலாம்.
அன்புள்ள இதயம் அனைத்தையும் அடையும்.
அன்பு நீடிய சாந்தமும். சந்தோஷமும் நிறைந்தது.
அன்பான வார்த்தைகள் ஆத்திரத்தை அடக்கும்.
அன்பு ஆணவம் அற்றது. அதிகாரம் செய்யாது.
அன்புள்ள இடத்தில் இன்பம் சுற்றிச் சுற்றி நிற்கும்.
அன்பிலே ஆனந்தமான வாழ்வு பிறக்கிறது.
அன்பு பழிவாங்காது. பாவம் செய்யாது. பண்புள்ளது.
அன்பு ஒரு அர்த்தமுள்ள வார்த்தையை அமைக்கின்றது.
அன்பு நீதியானது நேர்மையானது. நம்பிக்கையுள்ளது.
அன்பு கொடுப்பவரையும், வாங்குபவரையும் பிணைக்கின்றது.
அன்பு பாசமுள்ளது. மோசம் செய்யாது.
அன்பு இழக்கப்படும்போது அத்தனையும் இழக்கப்படுகின்றது.
அன்பு செழிப்பானது. சினம் கொள்ளாது. சந்தேகமற்றது.
அன்பு நுழையும் போது இன்பம் இறுதிவரை இருக்கும்.
அன்பு கலகம் செய்யாது. காலம் பூராவும் காப்பாற்றும்.
அன்பு மூர்க்கம் கொள்ளாது மென்மையானது. மேன்மையுள்ளது.
அன்புள்ள குடும்பம் வாழ்வு குதூகலம் பெறுகிறது.
அன்புள்ள இதயம் இளமை இழக்காது. இன்பம் பெருகும்.
அன்பு தன்னைப் புகழாது தற்பெருமை கொள்ளாது மென்மையானது.
அன்பினால் வரும் வார்த்தைகள் அளவற்ற ஆனந்தம் தரும்.
அன்பு இரக்கமுள்ளது. இறுமாப்பாயிராது. இனிது பேசும்.
அன்பு ஆதாரமாகக் கொண்டு அழகிய வாழ்க்கை அமைகின்றது.
அன்பிலே பிறந்தாய் வளர்ந்தாய் அதன் வழியே வாழ்ந்துகொள்.
அன்பை அறிந்தவர்க்கு ஆண்டவன் ஆசீர்வாதம் அமையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்....

எங்கள் குடும்பத்தின் குலவிளக்காம்

அமரர் **வள்ளிப்பிள்ளை** மாணிக்கம் அவர்களின்

மீளாத்துயில் செய்தி கேட்டு ஆறுதல் கூறியவர்களுக்கும் பல

வழிகளில் தோளோடு தோள் நின்று உதவி புரிந்த உற்றார்,

உறவினர், நண்பர்கள், அனைவருக்கும் நோயுற்று இருந்த

வேளையில் அன்றாடம் ஓடோடி வந்து கரம் கொடுத்துதவிய

புதுக்காட்டு உறவினர் நண்பர்கள் அனைவருக்கும் இன்றைய

நிகழ்விற்கு வந்து அனைத்து உதவிகளையும் புரிந்த

அனைவருக்கும் இம்மலரை அச்சிட்டு தந்த வேழன்

பதிப்பகத்திற்கும் பல வழிகளிலும் உதவி புரிந்த

அனைவருக்கும் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

– குடும்பத்தினர் –



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அனுபவம் என்பதே அறிவு

**பிறப்பில் வருவது யாதெனக் கேட்கேடன்**
பிறந்து பாரென இறைவன் பணித்தான்

**படிப்பெனச் சொல்வது யாதெனக் கேட்டேன்**
படித்துப் பாரென இறைவன் பணித்தான்

**அறிவெனச் சொல்வது யாதெனக் கேட்டேன்**
அறிந்து பாரென இறைவன் பணித்தான்

**அன்பெனப்படுவது யாதெனக் கேட்டேன்**
அளித்துப் பாரென இறைவன் பணித்தான்

**பாசம் என்பது யாதெனக் கேட்டேன்**
பகிர்ந்து பாரென இறைவன் பணித்தான்

**மனையாள் சுகமெனில் யாதெனக் கேட்டேன்**
மணந்து பாரென இறைவன் பணித்தான்

**வறுமை என்பது யாதெனக் கேட்டேன்**
வாடிப் பாரென இறைவன் பணித்தான்

**இறப்பின் பின்னது யாதெனக் கேட்டேன்**
இறந்து பாரென இறைவன் பணித்தான்.

அனுபவித்தே தான் அறிவது வாழ்க்கையெனில்
ஆண்டவனே நீ ஏன் எனக் கேட்டேன்
ஆண்டவன் சற்று அருகில் நெருங்கி
அனுபவம் என்பதே நான் தான் என்றார்.

கவிஞர்-கண்ணதாசன்

வேழன் பதிப்பகம், கிளிநொச்சி. 021 228 5579

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org